**முகாமைத்துவ சேவைகள் ரக்சன (பிரைவேட்) லிமிட்டெட் - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

முகாமைத்துவ சேவைகள் ரக்சன (பிரைவேட்) லிமிட்டெட்டின் (“கம்பனி”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கை தகவல்களை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**விடயங்களை வலியுறுத்தல்**

என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியற்றதாக்கப்பட்டதனால், நான் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல. 2 இற்கு கவனத்தை ஈர்க்கின்றேன். முகாமைத்துவ சேவைகள் ரக்சன (பிரைவேட்) லிமிட்டெட்டால் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன லிமிட்டெட்டிற்கு (SLICL) இரண்டாவதாக இருந்த ஊழியர்களை 2024 பெப்ரவரி 1 இலிருந்து இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன லிமிட்டெட் பிரித்தலை அமுலாக்குவதுடன் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன ஆயுள் லிமிட்டெட் மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன பொது லிமிட்டெட்டிற்கு மாற்றியிருந்தது.

ஊழியர்களை ஈடுபடுத்துகின்ற சட்ட விடயங்கள் நிலுவையாக இருந்தமையால் சபை முகாமைத்துவ சேவைகள் ரக்சன (பிரைவேட்) லிமிட்டெட்டின் செயற்பாடுகளை தொடருவதற்கு தீர்மானித்தது. இந்த பிரச்சனை முழுமையாக தீர்வு காணப்பட்டிருந்தன. நிலுவையிலுள்ள சட்ட வழக்குகள் தீர்வு காணப்பட்டிருப்பின் முகாமைத்துவம் நிலைமையை மீளாய்வு செய்வதுடன் கம்பனியை கலைப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் இதன்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் கொள்கையை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் மீதான உள்ளக கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| அ | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன லிமிட்டட்டின் (தாய் கம்பனி) கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் கம்பனியினுடைய கொடுப்பனவிற்காக பயன் படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. கம்பனி புறம்பான சட்ட ரீதியான நிறுவனமாக இருக்கின்றது. அவர்களுடைய சொந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிற்கு வேண்டப்பட்டுள்ளது. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கமைய வியாபாரம் தனது பெயரும் இலக்கமும் சகல பரிமாற்றங்களின் பட்டியல், காசோலைகளும் மற்றும் வியாபாரத்தின் சார்பில் கையொப்பிமிட்டிருந்த காசு அல்லது உற்பத்திக்கான கட்டளைகள் சகல கடித தொடர்பாடல், விலை பட்டியல் மற்றும் கடன் கடிதங்கள் என்பன முக்கியாக காணப்படுவதை உறுதி செய்யப்பட வேண்டும். | ரக்சன முகாமைத்துவ சேவைகள் (பிரைவேட்) லிமிட்டெட் (MSRPL) சட்ட ரீதியான தனியொரு நிறுவனமாக செயற்படுகின்ற போதிலும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன லிமிட்டெட் அதன் சொந்த வங்கி கணக்கின் ஊடாக MSRPL இன் சார்பில் சகல கொடுப்பனவுகளையும் வரலாற்று ரீதியாக கையாண்டிருந்தது. பின்னர், MSRPL ஆனது அந்த செலவினங்களை மீளளிப்பதற்கு இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன லிமிட்டெட்டிற்கு விலைப் பட்டியலை வழங்குகின்றது.<br><br>இந்த ஒழுங்குகள் இந்த உள்ளக நிதி நடைமுறைகளுடன் ஒத்துப் போகின்றதுடன் மையப்படுத்திய நிர்வாகத்தை எளிதாக்குவதற்கு வினைத்திறன் மற்றும் சரியான நிதி மேற்பார்வை உறுதி செய்யப்படுகின்றது.<br><br>மேலும் இந்த நடைமுறை முன்னைய ஆண்டுகளில் கணக்காய்வாளரால் மீளாய்வு செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது ஏற்றுக் கொள்ளக் கூடிய நியமங்களுடன் முறையான பிரமாண எதிர்பார்ப்புகளுடன் இணக்கத்தை உறுதிப்படுத்தப்படுகின்றது. | கம்பனியானது சகல நிதிக் கொடுக்கல் வாங்கல்களும் அதன் சொந்த பெயரில் நடாத்தப்படுகின்றதென உறுதிப்படுத்துவதற்கு பிரத்தியேக கொடுப்பனவு உறுதிச் சீட்டு முறைமை மற்றும் தொடர்புபட்ட நடைமுறைகள் தாபிக்கப்பட வெண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கம்பனியானது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கமைய இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| அ | வருடாந்த நிபுணத்துவ மதிப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணிக் கொடைப் பொறுப்பு ரூபா 163,524,724 ஆக இருந்தது. எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இல. 03 இன் பிரகாரம் ரூபா | நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற இந்த மீதி 2021 இல் இணக்கம் செய்யப்படாத செலவுகளிலிருந்து எழுந்தது. சகல ஊழியர்களும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாப ஆயுள் மற்றும் பொதுவிற்கு | முகாமைத்தவம் அதன் நிதிக் கூற்றுக்களின் பிரயோகிக்க கூடிய நியமங்களுடன் சரியான வெளிப்படையான மற்றும் பொருத்தமான கணக்கீட்டு |

| | | |
|---|---|---|
| 165,046,174 ஆன பணிக்கொடைப் பொறுப்பு நிதி நிலைமை கூற்றில் நடைமுறையல்லா பொறுப்பின் கீழ் பதியப்பட்டிருந்தது. பிரித்தலைத் தொடர்ந்து ரூபா 163,524,725 ஆன பணிக் கொடைப் பொறுப்பு இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் பொது லிமிட்டெட் மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன ஆயுள் லிமிட்டெட் என்பவற்றிற்கு மாற்றப்பட்டிருந்தது. சகல ஊழியர்களும். அந்த கம்பனிகளிற்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கம்பனியினுடைய நிதிக் கூற்றில் ரூபா 1,521,452 ஆன தேறிய பொறுப்பு இருந்தது. இந்த இருக்கின்ற பணிக்கொடை பொறுப்பு தொகைக்காக ஏதாவது விளக்கங்கள் அல்லது ஆவணச் சான்றுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மாற்றப்பட்டிருந்தது. உரிய பணிக்கொடைப் பொறுப்புகள் 2024 பெப்ரவரி 01 இல் உரிய கம்பனிகளிற்கு மாற்றப்பட்டிருந்தது. | நியமங்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு இருக்கின்ற பணிக்கொடை பொறுப்புக்களை விசாரணை செய்யப்பட்டு இணக்கம் செய்யப்பட பரிந்துரைக்கப்பட்டது. |

**1.6 நிறுவனத்தின் தொடந்தியங்கும் எண்ணக்கரு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன லிமிட்டெட்டை பிரித்தலைத் தொடர்ந்து 2024 பெப்ரவரி 01 இலிருந்து முகாமைத்துவ சேவைகள் ரக்சன (பிரைவேட்) லிமிட்டெட்டின் (MSRPL) ஊழியர்கள் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் பொது லிமிட்டெட் மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன ஆயுள் லிமிட்டெட் என்பவற்றிற்கு மாற்றப்பட்டிருந்தனர். பின்னர் கம்பனியினுடைய செயற்பாட்டு நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டின் போது குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டிருந்தது. வியாபார கொடுக்கல் வாங்கல்களில் எழுந்த வரையறுக்கப்பட்ட செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் வியாபாரத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையின்மை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவாக தொடருவதற்கு கம்பனியினுடைய இயலுமை ஐயத்திற்கிடமாக இருந்தது. | ஊழியர் தொடர்பான சட்டப் பிரச்சனைகள் நிலுவையில் உள்ளமை காரணமாக சபையானது அந்த பிரச்னையை முழுமையாக தீர்வு காணும் வரை முகாமைத்துவ சேவைகள் ரக்சன (பிரைவேட்) லிமிட்டெட்டின் (MSRPL) செயற்பாடுகள் தொடருவதற்கு தீர்மானித்தது.<br><br>சகல நிலுவையிலுள்ள சட்டப் பிரச்சனைகளும் தீர்வு காணப்படின் முகாமைத்துவம் இந்த நிலையை மீளாய்வு செய்வதுடன் கம்பனி கணக்கொழிப்பு செய்யும் வரை சாத்தியமான தீர்மானத்தை எடுக்கும். | கம்பனியின் நிதி நிலை செயற்பாட்டு திறன் மற்றும் எதிர்கால காசுப் பாய்ச்சல் மதிப்பீடுகளை கருத்திற் கொண்டு பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவம் பிரயோகிக்க கூடிய நிதி அறிக்கையிடல் கட்டமைப்பிற்கு அமைய விரிவான தொடர்ந்தியங்கும் தன்மையை நடாத்துவதற்கு பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் கம்பனியானது தொடர்ந்தியங்கும் கம்பனியாக தொடருவதற்கு குறிப்பிடத் தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மையை முகாமைத்துவம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**1.7 காசு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அ. 2018 இல் ஆரம்பத்தில் இடப்பட்ட ரூபா 1,000,000 தொகையான நிலையான வைப்புக்கள் 2024 சனவரி 31 இல் உள்ளவாறு ரூபா 1,630,247 இற்கு திரண்டிருந்தது | கம்பனியினுடைய பதிவழிப்பு நேரத்தில் முகாமைத்துவம் முகாமைத்துவ சேவைகள் ரக்சன (பிரைவேட்) லிமிட்டெட்டிற்கு சொந்தமான | கம்பனியின் நோக்கங்கள் மற்றும் நிதி உபாயங்களிற்கு ஏற்ப நிலையான வைப்புக்களின் பயன்பாட்டினை பணிப்பாளர் |

என அவதானிக்கப்பட்டது. நோக்கங்கள் மற்றும் செயற்பாட்டு தன்மையை கருத்திற்கொள்ளும் போது கம்பனியானது தற்போது செயற்பாட்டு ரீதியாக செயற்படாதிருந்தது. ஆகவே, இந்த வைப்புக்கள் பயன்படுத்தப் படாதிருந்ததுடன் பெறுமதியை உருவாக்கவோ அல்லது நிறுவன ரீதியான இலக்கினை அடைவதற்கு ஆதரவளிக்கவோ வினைத்திறனாக பயன்படுத்தப்படவில்லை.

நிலையான வைப்புக்கள் தொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கப்படும்.
ஒட்டு மெத்த நிதி மதிப்பீட்டு அடிப்படையிலும் கம்பனியின் பழிவழிப்பு அடிப்படையிலும் இந்த தீர்மானம் எடுக்கப்படும்.

சபையின் மீளாய்வின் அடிப்படையில் மதிப்பீடு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கம்பனி செயற்பாடு இன்மையால் வருமானம் உருவாக்குகின்ற சந்தர்ப்பங்களில் மீள் முதலீடு செய்வது போன் மாற்று தெரிவுகளை கம்பனி பரிசீலிக்கப்பட வேண்டும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 192,220 தொகையான இலாபமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 6,954,068 தொகையாகும். ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா 6,761,848 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. 2024 பெப்ரவரி 1 இலிருந்து முகாமைத்துவ சேவைகள் ரக்சன (பிரைவேட்) லிமிட்டெட்டின் சகல ஊழியர்களும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன ஆயுள் லிமிட்டெட் மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் பொது லிமிட்டெட்டிற்கு சகல ஊழியர்களும் மாற்றப்பட்டிருந்ததுடன் பின்னர் கம்பனயினுடைய முகாமைத்துவ கட்டணம் 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 809,576,651 ஆல் குறைவடந்திருந்தமையே வீழ்ச்சிக்கான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்குப் பகுப்பாய்வு

அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி சதவீதங்களுடன் முன்னைய நான்கு (04) ஆண்டுகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு பின்வருமாறு உள்ளன

| பிரதான விடயம் | 2024<br>ரூபா. 000 | 2023<br>ரூபா. 000 | 2022<br>ரூபா. 000 | 2021<br>ரூபா. 000 | 2020<br>ரூபா. 000 |
|---|---|---|---|---|---|
| முகாமைத்துவ கட்டணம் | **84,702** | **894,279** | **783,149** | **739,905** | **700,922** |
| முரண் | -809,577 | 111,130 | 43,244 | 38,983 | 117,400 |
| அதிகரிப்பு/ (வீழ்ச்சி) | -91% | 14% | 6% | 6% | 20% |
| **சம்பளங்கள்** | **38,048** | **378,119** | **329,202** | **304,247** | **293,090** |
| முரண் | -340,071 | 48,917 | 24,955 | 11,157 | 48,323 |
| அதிகரிப்பு/ (வீழ்ச்சி) | -90% | 15% | 8% | 4% | 20% |
| **ஊக்குவிப்பு / விடுமுறை/ மிகையூதியம்** | **14,321** | **232,833** | **189,532** | **214,591** | **187,944** |
| முரண் | -218,512 | 43,301 | -25,059 | 26,647 | 44,168 |
| அதிகரிப்பு/ (வீழ்ச்சி) | -94% | 23% | -12% | 14% | 31% |
| **பணிப்பாளர் வேதனங்கள்** | **550** | **6,050** | **3,126** | **5,099** | **10,178** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முரண் | -5,550 | 2,924 | -1,973 | -5,079 | -44,324 |
| அதிகரிப்பு/ (வீழ்ச்சி) | -91% | 94% | -39% | -50% | -81% |
| **நிர்வாக வருமானம்** | **84,559** | **878,367** | **756,341** | **729,451** | **693,852** |
| முரண் | -793,808 | 122,026 | 26,890 | 35,599 | 118,051 |
| அதிகரிப்பு/ (வீழ்ச்சி) | -90% | 16% | 4% | 5% | 21% |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு திறமையீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| சங்கத்தின் விஞ்ஞாபனத்தின் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் ரக்சன (பிரைவேட்) லிமிட்டெட் (MSRPL) பின்வரும் ஆரம்ப நோக்கங்களுடன் தாபிக்கப்பட்டது.<br>• காப்புறுதி முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பசேவைகள் வழங்குவதற்கு<br>• காப்புறுதி ஆலோசனை மற்றும் ஆலோசனை சேவைகள் வழங்குவதற்கு<br>• காப்புறுதி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சேவைகள் வழங்குவதற்கு<br>• பொதுவான முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவைகள் வழ்குவதற்கு<br><br>எவ்வாறாயினும், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன ஆயுள் லிமிட்டெட் மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் பொது லிமிட்டெட் என பிரிக்கப்பட்டதை தொடர்ந்து சகல ஊழியர்களும் MSRPL மற்றும் SLIC போன்ற அந்த புதிய நிறுவனங்களிற்கு மாற்றப்பட்ட பின்னர் இரண்டாவது இடத்திற்கு சென்றது. இதன் விளைவால், MSRPL ஆனது எந்தவொரு ஊழியரினது அல்லது அதன் நோக்கங்கள் தொடர்புபட்ட செயற்பாட்டு நடவடிகைகள் நிண்டகாலமாக இருக்கவில்லை.<br><br>தற்போது MSRPL ஆனது செயற்பாடற்ற கம்பனியாக செயற்படுகின்றது வரையறுத்த உபாய நோக்கங்கள் செயற்பாட்டிலிலுள்ள வர்த்தக ஈடுபாடுகள் அல்லது வேலைக் கட்டமைப்பு எதுவும் இருக்கவில்லை. கம்பனியின் உள்ளதன்மை செயற்பாடற்ற நிலையில் உள்ளது. மீளசெயற்படுத்தல், மீள்கட்டமைப்பு அல்லது கலைப்பு போன்ற அதன் எதிர்காலம் குறித்து தெளிவான முடிவு இருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் ரக்சன (பிரைவேட்) லிமிட்டெட் (MSRPL) மூலம் ஆட்சேர்ப்ப செய்யப்பட்ட ஊழியர்கள் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்டிருந்தனர். பிரிப்பதற்கு முன்னர் பின்பற்றப்பட்ட நடைமுறையாகும். உபாய திட்டம் மற்றும் வியாபார என்பவற்றின் அடிப்படையில் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன லிமிட்டெட்டால் தாபிக்கப்பட்டன.<br><br>மேலும், தனிப்பட்ட KPIs ஆனது MSRPL இடமிருந்து நீக்கப்பட்ட சிரேஸ்ட முகாமையாளர்களிற்கு ஒதுக்கப்பட்டனர்.<br><br>பிரித்தலைத் தொடர்ந்து SLIC இற்கு MSRPL இடமிருந்து ஊழியர்களை மாற்றியிருந்தது. இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன ஆயுள் லிமிட்டெட் மற்றும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் பொது லிமிட்டெட் நீக்கப்பட்ட ஊழியர்கள் மாற்றப்பட்டிருந்தனர். தற்போது MSRPL ஆனது செயற்பாடற்ற கம்பனியாக உள்ளது. | முகாமைத்துவ செவைகள் ரக்சன (பிரைவேட்) லிமிட்டெட் (MSRPL) இன் எதிர்கால சபை நுழைவு மீளச் செயற்படுத்துவதற்கு அல்லது கலைப்பது பற்றிய முறையான தீர்மானத்தை எடுப்பதற்கு பரிந்துரைத்துள்ளது. எவ்வாறாயினும் அது தற்போது செயற்பாட்டு நடவடிக்கைகள் அல்லது உபாய நோக்கம் இல்லாமல் செயற்பாடற்ற நிலையில் உள்ளது. |

## 4. கணக்களிப்பும் நால்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| அ 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனமும் சுதந்திரமான உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபையால் முறையாக நியமிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளரால் தலைமை தாங்கி உள்ளக கணக்காய்வு செயற்பாடு தாபிப்பதற்கு வேண்டப் பட்டுள்ளது. எவ்வாறாயினும், கம்பனியானது மீளாய்வாண்டிற்காக உள்ளக கணக்காய்வை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவம் 2022 இல் வெளித்தரப்பினரால் உள்ளக கணக்காய்வை தொடங்கியிருந்தது இதனால் முன்னேற்றத்தில் விளைந்தது. எவ்வாறாயினும் சகல ஊழியர்களும் SLIC ஆயுள் மற்றும் SLIC பொது இற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் தற்போது செயற்பாடுகள் நடைமுறையில் உள்ளன. உள்ளக கணக்கய்வு தேவையில்லை என நாங்கள் நம்புகின்றோம். | சபையானது கம்பனியின் தற்போதைய செயற்பாட்டு நிலையை மீளாய்வு செய்து ஆவணப் படுத்துவதற்கும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவுடன் இணங்கி அந்த விசேட சந்தர்ப்பங்களின் கீழ் உள்ளக கணக்காய்வை பேணுவதன் அவசியத்தை மதிப்பிடுவதற்கும் பரிந்துரைத்துள்ளது. |